**இலங்கை திறந்த பல்கலைகழகம்**

**சமூக கற்கைகள் துறை**

**இளையோர் அபிவிருத்தியில் உயர் டிப்ளோமா - மட்டம் 04**

**இறுதிப் பரீட்சை - பருவம் இரண்டு II - 2024/2025**

**DSD 4207 – இளைஞரும் சுகாதாரமும்**

**காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள் மட்டும்**

---

திகதி: **02/08/2025** நேரம்: **1.30 P.M.- 3.30 P.M.**

---

**அறிவுறுத்தல்கள்:**

- நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்
- ஒவ்வொரு வினாவுக்கும் 25 புள்ளிகள் வழங்கப்படும்
- மிக தெளிவாக விடையளிக்கவும்.

**வினா 1**

1.1. இலங்கையில் கட்டிடஉளமைப் பருவத்தினர் மற்றும் இளைஞர்களைப் பாதிக்கும் குறைந்தது ஆறு முக்கிய சுகாதாரப் பிரச்சினைகளை குறிப்பிடுக. *( 12 புள்ளிகள்)*

1.2. கேள்வி எண் 1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க உதவும் முகவர்கள் மற்றும் அவைகள் பயன்படுத்தும் தடுப்பு நுட்பங்களையும் விளக்குக. *(13 புள்ளிகள்)*

**வினா 2**

**2.1** சுகாதாரம் என்ற சொல்லை வரைவிலக்கணப்படுத்துக. *(5 புள்ளிகள்)*

**2.2** ஆரோக்கியமாக இருந்தாருலும் ஒருவருவர் நோய்வாய்ப்படலாம், உதாரணமாக, இருதய நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர், மாரடைப்பு ஏற்படும் வரை தனக்கு இருதய நோய் இருப்பதனை அறியாமலேயே இருக்க முடியும். இவ்வாறான சூழ்நிலைகளில் இளைஞர்களின் ஆரோக்கியத்தை உறுதி செய்வதில் இளைஞர் பணியாளரின் பங்கைப் பற்றி விவாதிக்கவும். *(20 புள்ளிகள்)*

**வினா 3**

தொழில் வசதியற்றிருக்கும் இளஞர்கள் போதைப்பொருள் விற்பனை போன்ற குற்றச் செயல்களில் அவை ஆபத்து என்று தெரிந்தும் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். இவ்விளைஞர்கள் தமது வாழ்வின் பொருட்டுமட்டும் இச்செயல்களில் ஈடுபடவில்லை. இத்தகைய குழுக்களிடையே ஏற்படும் தொடர்பு மற்றும் இத்தொடர்புகள் மூலம் இளைஞர்கள் பெறும் வருமானமும் இக்குற்றச் செயல்களில் ஈடுபட வைக்கின்றன. இதுபோன்ற சந்தர்ப்பங்களில், போதைப்பொருட்களைப் பயன்படுத்துவதும் விற்பனை செய்வதும் ஒரு அந்தஸ்தின் அடையாளமாக கூட மாறக்கூடும்.

இலங்கையில் போதைப்பொருளின் சமகால பரவல் மற்றும் அரசாங்கம் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் அறிமுகப்படுத்தியுள்ள தடுப்பு உத்திகளைப் பற்றி விவரிக்கவும்.

*(25 புள்ளிகள்)*

**வினா 4**

"ஆரம்ப சுகாதார பராமரிப்பு நோய் சுகாதார பராமரிப்பை விட ஒப்பீட்டு ரீதியில் மலிவான ஒன்றாகும்; எனவே, ஆரம்ப சுகாதார பராமரிப்பு உத்திகள் சிறந்த சமூக முதலீட்டு உத்திகளாகும்." பொருளாதார அபிவிருத்தியுடன் சுகாதாரம் எவ்வாறு தொடர்புபடுகிறது என்பதை சுகாதாரப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு விவரிக்கவும்.

*(25 புள்ளிகள்)*

**வினா 5**

சுகாதாரம் தொடர்பான அம்சங்களை வரையறுக்கும் காரணிகளை உடல் மற்றும் உளவியல் பரிமாணங்களின் கீழ் பரவலாக வகைப்படுத்தலாம். இந்த சூழலில்:

5.1 இலங்கையில், இளைஞர் மற்றும் சுகாதார அமைச்சு வகிக்கும் பங்கைப் பற்றி விவாதிக்கவும். உங்களது பதிலில், வாய்வழி சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரத் தேவைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட திட்டங்கள் போன்றவற்றை விபரிக்கவும்.

*(15 புள்ளிகள்)*

5.2 இலங்கையில் சுகாதார அமைச்சினால் ஆற்றப்படும் பங்கை பாரதூரமான மனவெழுச்சிக் கோளாறுகளைச் சமாளிக்க அறிமுகப்படுத்தப்பட்ட திட்டங்களை குறிப்பிட்டு விவாதிக்கவும்.

*(13 புள்ளிகள்)*

**வினா 6**

*6.1* பாதுகாப்பற்ற கருக்கலைப்புக்கு பங்களிக்கும் காரணிகளைப் பற்றி விவாதிக்கவும்.

*(12 புள்ளிகள்)*

*6.2* உலக சுகாதார அமைப்பு *(WHO)* அடையாளம் கண்டுள்ள, முன்னுரிமை செயற்பாட்டுக்கான ஆறு போசாக்குசார்ந்த பகுதிகளைப் விவரிக்கவும்.

*(13 புள்ளிகள்)*

*********முழுப்பதிப்புரிமை உடையது *********